செ.வெ.எண்.60 நாள்.20.10.2017.

திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் துப்புரவு பணிகள் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று அதிகாலையில் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். தூய்மையாக இல்லாத நிறுவனங்கள் மற்றும் வீடுகளுக்கு அபராதம் விதிக்கவும், விளக்க கடிதம் அனுப்பிடவும் உத்தரவிட்டார்.

--------

திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலம், மண்டல அலுவலகம், நகர ஆரம்ப சுகாதார நிலையம், சிவராஜபுரம், நாகம்மாள்புரம், முஸ்லீம் மேல்நிலைப்பள்ளி ஆகிய பகுதிகளில் துப்புரவு பணிகள், டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (21.10.2017) அதிகாலையில் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

மேலப்பாளையம் மண்டல அலுவலகம் மற்றும் நகர ஆரம்ப சுகாதார நிலையம் பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார். மண்டல அலுவலக வளாகத்தினை தூய்மைப்படுத்தவும் அங்கு வைக்கப்படிருந்த ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டபோது எடுத்து வரப்பட்ட பழைய பொருட்களை உடனடியாக அப்புறப்படுத்த உத்தரவிட்டார். டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணியாளர்களிடம் டெங்கு கொசு புழு ஒழிப்பு பணிகளை மிகுந்த கவனத்துடன் சிறப்பாக பணியாற்ற வேண்டுமெனவும், டெங்கு கொசு ஒழிப்பு புகை மருந்து அனைத்து வீடுகளிலும் அடிக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டார். மேலும், கொசு ஒழிப்பு பணியில் ஒத்துழைப்பின்றி கொசுக்களை உற்பத்தி செய்யும் வகையில் குப்பைகளை தேக்கி வைத்துள்ள தனியார் நிறுவனங்கள் மற்றும் வீடுகளுக்கு எச்சரிக்கை நோட்டீஸ் வழங்கவும், அபராதம் விதிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென உத்தரவிட்டார்.

தொடர்ந்து, சிவராஜபுரம் மற்றும் நாகம்மாள்புரம் ஆகிய பகுதிகளில் மாநகராட்சி மூலம் நடைபெற்று வரும் மெகா துப்புரவு பணிகள் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். தொடர்ந்து, வீடு, வீடாக சென்று குடிநீர் தொட்டிகள், டிரம்கள் உள்ளிட்டவைகள் சுத்தமாக பராமரிக்கப்பட்டுகிறதா என ஆய்வு செய்தார். மேலும், புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டடங்களில் கொசு புழு உற்பதியாகிறதா என்பதையும், கொசு ஒழிப்பு புகை மருந்து அடிப்பதையும் ஆய்வு மேற்கொண்டார். மேலும், அப்பகுதி பொதுமக்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் டெங்கு விழிப்புணர்வு குறித்து எடுத்துரைத்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

தமிழக அரசின் உத்தரவிற்கிணங்க திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சியர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் தூய்மை பணிகளை நாள்தோறும் அதிகாலை முதல் ஆய்வு செய்து வருகின்றனர். மேலும், இப்பணிகளில் 2000 பணியாளர்கள் கொசு ஒழிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு, பல்வேறு பகுதிகளில் தீவிரமாக கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்களும் தங்களது வீடுகளில் விழிப்புணர்வுடன் செயல்பட்டு, டெங்கு கொசு உற்பத்தியாக வண்ணம் தடுத்திட வேண்டும். தங்களது இல்லங்களுக்கு வரும் கொசு ஒழிப்பு பணியாளர்களுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு வாரங்களில் டெங்கு கொசு முழுமையாக கட்டுப்படுத்தப்படும். டெங்கு கொசு ஒழிப்பிற்கு தேவையான கூடுதல் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் 90 சுகாதார ஆய்வாளர்கள் பணியமர்த்தப்படவுள்ளனர். பள்ளி, கல்லூரி மற்றும் தனியார் நிறுவனங்கள், கடைகள், விடுதிகள், உணவகங்கள், தொழிற்சாலைகள் தங்களது வளாகப் பகுதிகளில் கொசு மற்றும் கொசு புழு உற்பத்தியாக வண்ணம் தூய்மையை பராமரிக்க வேண்டும். இப்பணிகளில் மெத்தனமாக உள்ள நிறுவனங்களின் மீது சுகாதார துறையின் மூலம் நடவடிக்கை எடுப்பதுடன், உள்ளாட்சித் துறையின் மூலம் அபராதமும் விதிக்கப்படும். திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு, மூன்று தினங்களில் ரூ.1 இலட்சம் வரை அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. கொசு ஒழிப்பு பணிகளில் மாவட்ட நிர்வாகத்திற்கு அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென தெரிவித்தார்.

ஆய்வின் போது, மாநகர நகர்நல அலுவலர் மரு.பொற்செல்வன், உதவி ஆணையர் திருமதி.கவிதா, மாநகர உதவி செயற்பொறியாளர் திரு.கருப்பசாமி, சுகாதார அலுவலர் திரு.சாகுல், சுகாதார ஆய்வாளர் திரு.சங்கரநாராயணன், நகர ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் திருமதி.ராணி குயின், வட்டாட்சியர் திரு.தங்கராஜ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.